கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மாசி மாத இதழ்
NEWS BULLETIN
FEBRUARY 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA எனும் முகவரியில் நடைபெற்று வருகின்றது
02/03/24	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் கௌரவிப்பு விழா Muslim Community Centre, Coventry இல் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D)	10.00am – 12.00am





OFAAL இன் விருது வழங்கும் விழா

இலண்டனில் 10/02/2024 அன்று நடைபெற்ற OFAAL இன் விருது வழங்கும் விழாவில் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களான 'பரதக் கலாவித்தகர்' 'கலைமானி' ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களும், 'நுண்கலைமானி' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களும் "**நாட்டிய கலா நிபுணா**" எனும் உயரிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.









எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் ஊடாக தமது அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்கிவரும் ஆசிரியர்கள் என்றுமே விருதுக்கு உரியவர்களே. அவ்வாறான ஆசிரியர்களைப் பெற்ற மாணவர்களும், பாடசாலையும் பாக்கியசாலிகளே.

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில் ஆரம்பம் முதல், முறையாக, பரதநாட்டியத்தை 'பரதக் கலாவித்தகர்' 'கலைமானி' 'நாட்டியக் கலாநிபுணா' ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களிடம் பயின்று, "**கலாஜோதி**" பட்டத்தை, செல்வி அரச்சனா ரமணன், செல்வி ஜெயர்த்திகா ஜெயதீஸ்வரன், செல்வி சஸ்மிதா பாஸ்கரன், செல்வி தனிஷ்கா சிவா ஆகிய மாணவிகள் பெற்று எல்லோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.



அன்றைய தினம் விருது பெற்ற ஆசிரியர்கள், மாணவிகளுக்கு கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ் திறன் போட்டி முடிவு 2024

5வயதுக்குட்பட்டோர்

மனனம்

1ம் இடம்-மதுகை மயூரன்
2ம் இடம்-ஆதீசன் பாகீஸ்வரன்
3ம்இடம்-பூர்விகா பிரதீப்

பாடல்

1ம் இடம்-மதுகை மயூரன்
2ம் இடம்-ஆதீசன் பாகீஸ்வரன்

5-7வயதுக்குட்பட்டோர்

மனனம்

1ம் இடம்-ஜானுஜா அகிலன்
2ம் இடம்-ஹரி நக்கீரன்
3ம் இடம்-லதுஷன் திருவரங்கன்

பாடல்

1ம் இடம்-ஜானுஜா அகிலன்
2ம் இடம்-தாரகி ரவிக்குமார்
3ம் இடம்-பவீசன் அரவிந்தன்
ஜகீதன் நிகேதன்

கதை

1ம் இடம்-கபிசன் மயூரன்
2ம் இடம்-பவிசன் அரவிந்தன்
3ம் இடம்-அருஷ் கோகிலநாதன்

7-9 வயதுக்குட்பட்டோர்

மனனம்

1ம் இடம்-வர்ஷிதா ஜெயசங்கர்
பிரணதி
2ம் இடம்-இவானா காண்டீபன்
3ம் இடம்-மேகித்ரா பிரபு

பாடல்

1ம் இடம்-டிவீனா நிகேதன்
2ம் இடம்-இவானா காண்டீபன்
3ம் இடம்-டஸ்னிகா கோகிலநாதன்

பேச்சு

1ம் இடம்-யாகவி விக்னேஸ்வரன்
2ம் இடம்-ஜவீசன் ரவீந்திரன்

தனி நடிப்பு

1ம் இடம்-டஸ்னிகா கோகிலநாதன்
2ம் இடம்-பிரணதி

9-11 வயதுக்குட்பட்டோர்

மனனம்

1ம் இடம்-திவ்யா நக்கீரன்
2ம் இடம்-லிங்கா சர்வாணந்தலிங்கம்
3ம் இடம்-கவிணயா கரேஷ்தாஸ்

பேச்சு

1ம் இடம்-ஸ்ரீசந்தனா பிரபுசங்கர்
2ம் இடம்-ஆஷ்கா கோபிகரன்
3ம் இடம்-திவ்யா நக்கீரன்

கவிதை

1ம் இடம்-டெனீஷியன் றொபின்சன்
2ம் இடம்-லக்ஷன் திருவரங்கன்
3ம் இடம்-அருஷினி விசையரூபன்

தனி நடிப்பு

1ம் இடம்-சித்தேஷ்வர் கௌரிசங்கர்
2ம் இடம்-சர்வேஷ்வர் கௌரிசங்கர்
3ம் இடம்-லிங்கா சர்வாணந்தலிங்கம்

11-13 வயதுக்குட்பட்டோர்

மனனம்

1ம் இடம்-மதீரன் சௌந்தரராஜன்
2ம் இடம்-மதீபன் சௌந்தரராஜன்
நிவிஷா ஸ்ரீகந்தராஜா
3ம் இடம்-ரெதுஷன் இரவீந்திரன்
அஸ்வந் அன்பழகன்

கவிதை

1ம் இடம்-அக்ஷயன் ககந்தன்
2ம் இடம்-அர்ஷன் விசையரூபன்
3ம் இடம்-அனுஜன் ஜெயசங்கர்

பேச்சு

1ம் இடம்-நன்மல் ரஞ்மான்
2ம் இடம்-மதீரன் சௌந்தரராஜன்

13-15 வயதுக்குட்பட்டோர்

மனனம்

1ம் இடம்-லக்ஷ்மிதா உருத்திரன்
2ம் இடம்-அனுஷ்யா பிரதீத்

கவிதை

1ம் இடம்-நிரீஷாந் கேதீஸ்வரன்
2ம் இடம்-லக்ஷ்மிதா உருத்திரன்



உலகுக்கு எல்லாம் தாய்மொழாயாக விளங்கும் மொழி, எம் தாய்மொழி தமிழ். அமிழ்தினும் இனியது தமிழ். எத்தனையோ மொழிகளைப் படித்தபோதும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார்.

அந்தத் தமிழ்ப் பரம்பரையில் வந்த நாங்கள் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள். எத்தனையோ இதிகாசங்கள், காப்பியங்களை எழுதி எம் முன்னோர்கள் காத்து வந்த தமிழை, புலம்பெயர் தேசத்தில் வாழும் நாங்கள் பேசுவதன் மூலமும் எம் இளந்தலைமுறைக்கு கற்பிப்பதன் மூலமும் எதிர்காலத்தில் தமிழின் இருப்பை நிலைநாட்ட வேண்டாமா?

இயந்திர வாழ்க்கைதான் இல்லை என்று சொல்லவில்லை. இருப்பினும் முடிந்த அளவுக்கு நேரத்தை ஒதுக்கி எமது பிள்ளைகளுக்கு தமிழின் பெருமையை அறிய வைப்போம்.

"வாழ்க தமிழ்"

சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது

தமிழுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து நீண்ட காலமாகத் தொடர்ந்து பல பணிகளையாற்றி வருபவரும், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தலைவருமான பெருமதிப்புக்குரிய திரு சிவாப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்களின் சேவைகளைப் பாராட்டி தமிழ்நாட்டு அரசாங்கம் "**சிறந்த மொழிபெயர்ப்பாளர்**" என்னும் விருதை வழங்கிக் கௌரவித்தது.

திரு சிவாப்பிள்ளை ஐயா அவர்களைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கமும் அவரது சேவை மேலும் தொடர மனதார வாழ்த்தி நிற்கின்றது.





ஈழத்துப் புலமைகள். (பாகம் 17)

கடந்த இதழிலே !

யாழ்ப்பாணம் இணுவிலை பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பிப் புலவர் பற்றி பார்த்திருந்தோம்.

இவ்விதழிலே ,தென் கோப்பாய் இருபாலையில் வாழ்ந்த புலவர் நெல்லை நாத முதலியார் அவர்கள் பற்றிப் பார்ப்போம்.இவர் சிறந்த கற்றறிந்த குடியில் பிறந்தவர்.மிகுந்த ஞாபக சக்தி வாய்ந்தவர் எனக்கருதப்படுபவர்.

இவரைப்பற்றிய ஒரு சுவரஸ்யமான கதை ஒன்றினைக்காண்போம்.

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தை கட்டி சைவத்தமிழை வளர்த்த - வண்ணை வைத்திலிங்க செட்டியார் மீது ஒரு பிரபந்தத்தை பாடிக்கொண்டு வந்த வடதேசத்தைச் சேர்ந்த (யாழ்ப்பாணத்திற்கு வடக்கேதான் தென்னிந்தியா இருக்கிறது அதனால் வடதேசம் என அழைக்கப்பட்டிருந்தது) செந்திக்கவி எனும் புலவர்,தன் விருப்பத்தை செட்டியார் அவர்களிடம் தெரிவிக்க,அவரும் அப்பிரபந்தங்களை வைத்தீஸ்வரன் கோயில் மண்டபத்திலே அரங்கேற்ற திருவுளங்கொண்டு காலத்தை நியமித்து,யாழ்ப்பாணத்தில் இருந்த பல வித்துவான்களுக்கு திருமுகம்(அழைப்பு மடல்) அனுப்பினார்.

அரங்கேற்ற நாளிலே,அழைப்புக்கிடைத்த வித்துவான்கள் கோயில் மண்டபத்தில் கூடினர்.அப்போது, நெல்லை நாத முதலியாரும் வந்தனர்.

செட்டியாருடன் அனைத்து வித்துவான்களும் எழுந்து மரியாதையுடன் முதலியாரை வரவேற்றனர்.அப்போது செந்திக்கவி மட்டும் இறுமாப்புடன் தன் இருக்கையிலேயே அமர்ந்திருந்தாராம். அப்போது செட்டியாரவர்களின் உத்தரவுப்படி செந்திக்கவி தன் பிரபந்தங்களை பாடினர்.

அப்போது அங்கிருந்த சிரேஸ்ட வித்துவான் ஒருவர்,பிரபந்தங்கள் எப்படி என்று நெல்லை நாத முதலியாரிடம் கேட்க,அவரும் இது பழைய பாடல் என்று அமைதியாக பதிலளித்து அப்பாடலை அவரே பாடிக்காட்டினார்.

சபையினர்க்கு அதிசயமாக இருக்க, செந்திக்கவி அதிர்ந்து போக,செட்டியார் நெல்லை நாத முதலியாரைப்பார்க்க - நெல்லை நாதரும் சிரித்துக்கொண்டே,செந்திக்கவி அவையடக்கம் புரியாதவர் என்பதையும்,இறுமாப்புக்கொண்டவர் என்பதையும் உணர்த்தினர்.அப்போது செந்திக்கவி எழுந்து தனது தறுக்காக மன்னிக்கும்படி வேண்டிக்கொனண்டார். செந்திக்கவியை மன்னித்து அவருக்கே பரிசில்களை வழங்குமாறும் நெல்லை நாதரும் செட்டியாரை வேண்டிக்கொண்டார் என்றும் அதன் பொருட்டு செட்டியார் பரிசில்களை செந்திக்கவிக்கு வழங்கினார். அவ்வேளை தன்னால் செந்திக்கவிக்கு ஏற்பட்ட அவமானத்திற்காக வருந்தி அவருக்கு இரண்டாயிரம் ரூபா சன்மானமாக நெல்லை நாத முதலியார் வழங்கினர் என்றும் கூறுவர்.

அக்காலத்திலே; எம்மிடையே

அட்டாவதானிகளும்,சதாவதானிகளும் பல்துறை அறிஞர்களும் வாழ்ந்தனர்.சொல்வதை அப்படியே ஒப்புவிக்கும் ஞாபக சக்தி வாய்ந்த அறிஞர் பலரும்,ஆசான்களாக இருந்துள்ளனர்.இப்போது பல நெருக்கடிகளால்- சொன்னதை அவ்விடத்திலேயே மறந்து விடும் சமுதாயமாக மாறிவருகிறோம் என்பது கவலைக்குரியதே!!

(தொடரும்)

ஆக்கம்
ஆசிரியர் திரு மாணிக்கம் தவதுரை
Master Knowledge Educational Services